**சமுன்னதி பைனான்சியஸ் இன்டர் மீடியேஷன் அண்டு சர்வீஸ் பிரைவேட் லிமிட்டெட்**

இந்த நியாயமான நடைமுறை குறியீடு ரிசர்வ் வங்கியின் முதன்மை சுற்றறிக்கையை அடிப்படையாகக்கொண்டது. (Master circular DNBR (PD) CC.No. 054/03.10.119/2015-16 dt.1st July, 2015).

ரிசர்வ் வங்கி தொடர்ந்து மற்றும் அவ்வப்பொழுது வழங்கும் சுற்றறிக்கையின்படி நமது நியாயமான நடைமுறை குறியீடு திருத்தம் செய்யப்பட்டு மேம்படுத்தப்படும்

**1. குறியீட்டின் குறிக்கோள்**

குறியீட்டின் நோக்கங்கள் பின் வருமாறு:-

1. வாடிக்கையாளர்களை கையாளுவதில் குறைந்தபட்ச தரநிலைகளை அமைப்பதன் மூலம் நியாயமான நடைமுறைகளை மேம்படுத்த வேண்டும்

2. வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதால் வாடிக்கையாளர்கள் நிறுவனத்திலிருந்து எந்த விதமான சேவையையும் எளிதாக புரிந்து கொள்ள முடியும்.

3. நிறுவனத்தின் மீது வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை வளர்க்க வேண்டும்.

**II. குறியீட்டு பயன்பாடு**

இந்தக் குறியீடு நிறுவனத்தின் அனைத்து சேவைகளுக்கும் பொருந்தும்.

இந்த நிறுவனம் அதன் வாடிக்கையாளர்களின் நிதி தேவைகளை பூர்த்தி செய்ய தொடர்ந்து தன் சேவைகளை மதிப்பீடு செய்யும்.
இந்தக் குறியீடு நிறுவனத்தின் ஏற்கனவே உள்ள அனைத்துவாடிக்கையாளர் சேவைகளுக்கும் மற்றும் புதிதாக உருவாக்கும் சேவைகளுக்கும் பொருந்தும்.

**III. கடன்கள் மற்றும் அவற்றின் செயலாக்க விண்ணப்பங்கள்**

1. கடன் வாங்கியவருக்கு அதைப் பற்றிய அனைத்து தகவல்களளும் அவர்கள் புரிந்து கொள்ளும் மொழியில் அல்லது வட்டார மொழியில் இருத்தல் வேண்டும்.
2. கடன் விண்ணப்ப படிவங்களில் உள்ள தகவல்கள், நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் கடன் வாங்குபவர் மற்ற நிதி நிறுவனத்தோடு ஒப்பீடு செய்யும் அளவிற்கு அனைத்து தகவல்களையும்

பெற்றிருக்கவேண்டும் கடன் விண்ணப்ப படிவத்தை சமர்ப்பிக்க கூடிய அனைத்து ஆவணங்களும் கடன் விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

3. நாம் பூர்த்தி செய்யப்பட்ட கடன் விண்ணப்பத்தை வாங்கும்போது அதற்கான ஒப்புதல் சீட்டை கொடுப்பதற்காக செயல்திட்டங்களை வகுக்க வேண்டும்.

**IV. கடன் மதிப்பீடு மற்றும் விதிமுறைகள்/ நிபந்தனைகள்.**

1. நாங்கள் கடன் வாங்குபவரால் புரிந்துகொள்ளக்கூடிய மொழியில் மற்றும் கடன் வாங்கியவரிடம் அனுமதி கடிதம் மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் நிபந்தனைகள் கடன் வழங்கப்பட்ட தொகை வருடாந்திர வட்டி விகிதம் ஆகியவற்றை குறிப்பிட்டு ஒப்புதல் பெற்றுக் கொள்வோம்.

2. நாங்கள் கடனாளியின் ஒப்பந்தத்தில் தாமதமாக திருப்பிச் செலுத்துவதற்கான தண்டனைக்குரிய வட்டியை **அழுத்தமான** வரிகளில் பதிவு செய்வோம்.

3. நாங்கள் கடனாளி இடம் ஒவ்வொரு பிரதியுடன் புரிந்துகொள்ளக்கூடிய ஒப்பந்த நகல்கள் மற்றும் அதை சார்ந்த இணைப்புகளை கடன் அனுமதிக் கடிதம் அல்லது கடன் வழங்கும் தருவாயில் அளிப்போம்.

**V. கடன் வழங்குதலில் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் அதன் மாற்றங்களும்.**

1. நாங்கள் கடனாளிகள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் அறிவிப்புகளை அவர் புரிந்து கொள்ளும் மொழியில் அல்லது அவரது வட்டார மொழியில் எங்களது விதிமுறைகளையும் மற்றும் நிபந்தனைகளையும் மற்றும் அதனில் மாற்றங்கள் இருப்பின் கடன் வழங்குதல் அட்டவணை வட்டி விகிதம் சேவைக்கட்டணம் முன் செலுத்தும் கட்டணங்கள் மற்றும் இதரவற்றை அறிவிப்போம். இந்த நிபந்தனைகள் அனைத்தும் கடன் ஒப்பந்தத்தில் சேர்க்கப்படும்.

2. கடனைத் திரும்பப் பெறுதல் அல்லது திருப்பு செலுத்துவதை முடக்கி விடுதல் இவை அனைத்தும் கடன் விண்ணப்பத்தோடு இசைந்து இருக்கும்.

3. நாங்கள் எங்களுக்கு கடனாளி தரவேண்டிய கடன் பாக்கி எதுவும் இல்லாமல் முழுமையாக அடைத்து விட்டால், அவர்களுக்கு எந்த வித ஆட்சேபனையும் இன்றி அவர்களுக்கு சேரவேண்டிய அனைத்து முறையான உரிமைகளை அளிப்போம். எங்களிடம் கடன் பெற்றவர்

கடன் செலுத்த தவறி இருந்தால் அவர்களுக்கு சட்டபூர்வமான அறிவிப்பு கொடுத்த பின்பு எங்களது நடவடிக்கையை எடுப்போம் மற்றும் கடனை திருப்பி செலுத்தும் வரை நாங்கள் கடன் தொடர்புடைய பத்திரங்களை வைத்துக்கொள்வோம்.

**VI. பொதுவான நடைமுறைகள்**

1. நாங்கள் கடன் வாங்கியவரின் வாழ்வில் எங்களிடம் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி தவிர வேறு எந்த முறையிலும் எந்த தலையீடும் செய்ய மாட்டோம் .

2. ஒருவேளை கடன் வாங்கியவர் எங்களிடம் கடனையும் மாற்ற விண்ணப்பித்தால் நாங்கள் அதற்கான ஒப்புதல் அல்லது எங்களது குறுக்கீடுகளை 21 நாட்களுக்குள் தெரிவிப்போம். நாங்கள் கடனாளியின் விண்ணப்பத்தை அவர் எங்களிடம் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி வெளிப்படை தன்மையுடன் செயல்படுத்துவோம்.

3. கடனை திருப்பி வாங்குவதற்காக நாங்கள் எந்த ஒரு துன்புறுத்தலில் ஈடுபட மாட்டோம். அதாவது கடன் வாங்கிய வரை கண்ட நேரத்தில் கேட்கவோ அல்லது துன்புறுத்தவோ செய்ய மாட்டோம். நாங்கள் எங்களது ஊழியர்களிடம் எங்களது கடனாளிகளை எப்படி சமாளிப்பது என்பதற்கான பயிற்சியை அடிப்போம்.

4. நாங்கள் எங்களிடம் வாங்கிய கடனை முன்கூட்டியே அடைத்தால் அதற்காக எந்த ஒரு தொகையையும் மிதவை வட்டி கடன்களுக்கு பெற மாட்டோம்.

**VII. இயக்குனர்களின் பொறுப்பு**

எங்களது இயக்குனர்கள். குறைகளை நிவர்த்தி செய்வதற்கான அனைத்து முடிவுகளை எடுப்பார்கள். அவர்கள் எடுக்கும் முடிவுகள் கடனாளியின் சர்ச்சைகளை தீர்த்துவைக்கும். எங்களது வாரியத்தின் இயக்குனர்கள் அவ்வப்பொழுது சர்ச்சைகளை ஞாயமான நடைமுறை குறியீட்டின்படி களைந்து விடுவார்கள். இயக்குனர்கள் அவ்வாறு தீர்க்கும் சர்ச்சைகளை பொதுக்குழு கூடும் பொழுது அதை தெரிவிப்பார்கள்.

**VIII. குறைகளைத் தீர்க்கும் அதிகாரி**

நாங்கள் எங்களது நிறுவனத்தில் மற்றவர்களின் பார்வையில் படும் முக்கிய இடத்தில் எங்களது செயல்பட்டு நிலைகளை வாடிக்கையாளர்கள் கவனத்திற்காக, எங்களது எல்லா கிளைகளிலும் மற்றும் வணிகம் செய்யும் இடத்திலும் பின்வருமாறு வைப்போம்.

(a) குறைதீர்க்கும் அதிகாரியின் பெயர் மற்றும் அவரைத் தொடர்பு கொள்ளும் விவரங்களை (தொலைபேசி /கைபேசி மற்றும் மின்னஞ்சல் முகவரிகளை) பொதுமக்கள் தாங்கள் எங்கள் மீது உள்ள புகார்களை தீர்ப்பதற்காகவும்

(b) புகார் மற்றும் விவாதங்களை ஒரு மாதத்திற்குள் நாங்கள் திருத்தம் செய்யப்பட வில்லை என்றால் வாடிக்கையாளர் ரிசர்வ் வங்கியின் பிராந்திய பொறுப்பில் உள்ள, வங்கி அல்லாத துறைகளின் மேற்பார்வை அதிகாரியிடம் தெரிவிக்கலாம்.

இந்த பொது அறிவிப்பு வாடிக்கையாளர்களுக்கான சேவைகளை உயர்த்துவதற்கான நோக்கத்துடன், குறைகளை சரி செய்யும் வழிமுறைக்கு உதவும்படியும் குறை தீர்க்கும் அதிகாரி மற்றும் பிராந்திய ரிசர்வ் வங்கி அலுவலர் அலுவலகத்திலும் வைக்கப்படும்

## IX. மொழி மற்றும் நடைமுறை குறியீடு தொடர்பான செயல்படுத்தும் முறை

இந்த நியாயமான நடைமுறை குறியீடு பொதுமக்கள் அறிந்து கொள்ளும் பிராந்திய மொழிகளில் பங்குதாரரர்களுக்கும் இணையதளம் மூலமாகவும் அறியும்படி இருக்கும்.

## X. வட்டி விகிதம்

(a). நாங்கள் எங்களது வட்டிக்கான விகிதத்தை பணத்தை செலவிடும் மாதிரியுடன் கடன் வழங்குதலில் எங்களுக்கு கிடைக்கக்கூடிய வருவாய் மற்றும் அதை எதிர் பார்க்கும் தருணத்தில் எங்களுக்கு ஏற்படும் செலவீனங்கள் மற்றும் ஆபத்துக்களை அறிந்து எங்களது வட்டி விகிதத்தை நிர்ணயிப்போம்
(b) வட்டி விகிதம் மற்றும் தரத்தின் விளைவுகள் இணையதளத்திலும் மற்றும் செய்தித்தாள்களிலும் வெளியிடப்படும். குறிப்பிடப்பட்ட வட்டி விகிதத்தில் மாற்றம் ஏதேனும் இருப்பினும் அவை அனைத்தையும் செய்தித் தாள்களிலும் மற்றும் வலைதளத்திலும் வெளியிடப்படும்.

(C) கடன் வட்டி விகிதம் வருடாந்திர வட்டி விகிதமாக இருக்க வேண்டும் அப்படி இருந்தால் வாடிக்கையாளர்கள் வட்டி விகிதத்தை எளிமையாக அறிந்து கொள்ள முடியும்.

(d). நாம் வட்டி விகிதங்கள் செயலாக்கம் மற்றும் இதர கட்டணங்கள் மற்றும் செயலாக்கங்களை நினைக்கும் போது நமது உள் கொள்கைக்கு ஏற்றவாறு கடைபிடிப்போம்.

**XI. நாம் கடனுதவி உதவி அளித்த வாகனங்களை திரும்பி எடுத்தல்.**

நாங்கள் கடனுதவி ஒப்பந்தத்தில் மற்றும் ஒப்பந்தத்தில் கடன் வாங்கியவரிடம் இதற்கான உட்கூர அறிவிப்பு மற்றும் வெளிப்படைத்தன்மையாக கீழே வரும் குறிப்புகளை குறிப்பிடுவோம் (a) திரும்ப பெறுவதற்கான அறிவிப்பு காலம் (b) எந்தெந்த காலத்தில் அறிவிப்பு காலம் தளர்த்தப்படும் என்றும் (c) பொருட்களைத் திரும்பப் பெறுவதற்கான நடைமுறைகளையும் (d) கடனாளி தன் கடனை திரும்பி செலுத்துவதற்கான வாய்ப்புகளை எம்மிடம் கடன் வாங்கிய பொருளை விற்பதற்கு மற்றும் ஏலத்தில் விடுவதற்கு முன்பு (e) வாடிக்கையாளர் அவர் பொருளை திரும்பி எடுப்பதற்கான வழிமுறைகளையும் மற்றும் (f) விற்பனை மற்றும் ஏலத்தின் மூலம் பொருட்களை விற்பனை செய்தல், இதுகுறித்து அனைத்து தகவல் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய நகல்களை எங்களது வாடிக்கையாளருக்கு தெரிவிப்போம்.

**XI. தங்க நகைகளுக்கு கடன் கொடுத்தல்**

தங்க நகைகளுக்கு கடன் வழங்கும் போது நாங்கள் மேலே குறிப்பிடப்பட்ட விதிமுறைகளுடன் கீழே குறிப்பிடப்பட்ட அனைத்து விதிமுறைகளையும் கடைபிடிப்போம் இதற்கான அனுமதியை நாங்கள் எங்களது நிறுவனத்தின் இயக்குனர்களால் அனுமதி பெற்று செயல்படுத்துவோம்

(a). வாடிக்கையாளரை பற்றி தெரிந்து கொள்ள அனைத்து முயற்சியையும் ரிசர்வ் வங்கி குறிப்பிட்டுள்ள அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கட்டாயமாக கடன் வழங்கும் முன் கடைபிடிப்போம்.

(b). தங்க நகை மதிப்பீடுகளை உரிய முறையில் தங்கம் வாங்கும்போது செயல்படுத்துவோம்

(C) எங்கள் கோட்பாட்டு விதிமுறைகளின்படி தங்க நகைகளின் பாதுகாப்பையும்

(d) தங்கத்தை பாதுகாத்து வைப்பதற்கு தேவையானவற்றையும் மற்றும் அவ்வப்பொழுது அதன் பாதுகாப்பு நிர்ணயம் செய்தும் மற்றும் எங்களது ஊழியர்கள் அனைவருக்கும் அக தணிக்கையாளர் உதவியுடன் அதனை உறுதி செய்வோம் இதுபோன்ற தங்க நகை கடன்களை நாங்கள் எந்த ஒரு பாதுகாப்பும் அற்ற எங்களது கிளைகளில் செய்ய மாட்டோம்

(E) கடன் கொடுத்துப் பெற்றுக் கொண்ட தங்க நகைகளை நாங்கள் தக்கவாறு காப்பீடு செய்வோம்

(F) ஏலத்தை நாங்கள் வெளிப்படைத்தன்மையுடன் தக்க அறிவிப்பு வாடிக்கையாளருக்கு கொடுத்த பிறகே செய்வோம் அவ்வாறு செய்யும் பொழுது நாங்கள் வட்டி மற்றும் அசல் சம்பந்தமான எந்த பிரச்சினையும் இல்லாமல் நாங்களும் எங்களது துணைநிறுவனங்கள் செயல்படுத்துவோம்.

(g) நாங்கள் ஏலத்தில் விடும் நகைகளை முன்னதாக பொது மக்களுக்கு வட்டார நாளிலும் மற்றும் தேசிய நாளிதழிலும் அறிவித்த பின் செயல்படுத்துவோம்

(h) எங்களது கோட்பாட்டின்படி நாங்கள் அந்த ஏலத்தில் கலந்து கொள்ள மாட்டோம்

(I) தங்க நகை இல்லத்தை நாங்கள் எங்கள் செயற்குழு அனுமதி தந்த தங்க நகை ஏலத்தை விடுபவர்கள் மூலமாகவே செய்வோம்

(J) இந்த நடைமுறை எங்களது கோட்பாட்டின்படி தவறுகள் ஏதும் நடக்காமல் தகுந்த அனுமதி பெற்றே செய்வோம்

(K) எங்களது கடன் ஒப்பந்தம் ஏல விதி நிபந்தனைகளை உள்ளடங்கியதாகும்

XIII ஆய்வு இந்த ஞாயமான நடைமுறை குறியீடு மற்றும் தீர்வு காணும் முறை அனைத்தையும் எங்களது மேலாண்மை நிர்வாகிகள் அவ்வப்பொழுது பரிசீலினை மற்றும் மறு பரிசீலனை செய்வார்கள் அப்படி மறுபரிசீலனை செய்யப்பட்ட இந்த நடைமுறை கோட்பாட்டை எங்களது நிர்வாகத்தின் இணையதளத்தில் பதிவிடுவோம்